# வாக்குமூலம்
# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இலுப்பூர்

STC.No 218/2025
நாள் : 17.11.2025
பெயர்: ஆறுமுகம்
த/பெ : ராமக்கோனார்
வயது : 47
ஊர் : ஆரியக்கோன்பட்டி

ஆறுமுகம் ஆகிய நான் சத்தியத்தின் பேரில் கூறும் வாக்குமூலம் என்னவென்றால் எனது சொந்த ஊரான ஆரியக்கோன்பட்டியில் அரசு ஊராட்சி ஒன்றிய நடுநிலை பள்ளியில் எதிரி குமார் ஆசிரியராக பணிபுரிந்து வந்த வகையிலும், மேற்கண்ட பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் பழக தலைவராக நான் இருந்து வரும் வகையிலும் எதிரி, எனக்கு நன்கு பழக்கப்பட்டவர் ஆவார். எதிரி, தனது முன்கடன் தீர்ப்பதற்காகவும், தனது குடும்ப அவசர செலவிற்காகவும் என்னிடம் கடந்த 25.04.2025 ம் தேதியில் நேரில் அணுகி, பெற்றுக் கொண்ட கடன் தொகையை திரும்பி செலுத்தும் பொருட்டு , எதிரி நாளது தேதியில் அவருக்கு வங்கி கணக்குள்ள திருச்சிராப்பள்ளி, ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கியின், கண்டோன்மெண்ட் கிளையின் காசோலை எண்.848402 ல் ரூ.5,00,000/– ( ஐந்து இலட்சம் மட்டும் ) த்திற்கு 21.07.2025 தேதியிட்டு கையெழுத்து பூர்த்தி செய்து கொடுத்துள்ளார். எதிரியின் வங்கி கணக்கு எண். 20402160094 ஆகும்.

நானும், எதிரி கேட்டுக் கொண்டபடி, மேற்படி காசோலை தொகையை வசூல் செய்யும் பொருட்டு நான் வங்கி கணக்கு வைத்துள்ள புதுக்கோட்டை இந்தியன் வங்கி ( e Allahabad Bank ) இலுப்பூர் கிளையில் கடந்த 21.07.2025 ம் தேதியில் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி காசோலை , எதிரியின் வங்கி கணக்கில் " Funds Insufficient" என்று குறிப்பிட்டு என்ற காரணத்துடன் 22.07.2025 தேதியன்று திருப்பப்பட்டுள்ளது. இந்த விபரம் புதுக்கோட்டை, இந்தியன் வங்கி ( e Allahabad Bank) இலுப்பூர் கிளையின் குறிப்பாணை மூலம் 22.07.2025 ம் தேதியில் எனக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிரியின் செய்கையால் ஏமாற்றப்பட்ட நான் ,எதிரி கொடுத்த காசோலை எதிரியின் வங்கி கணக்கில் "Funds Insufficient" என்ற காரணத்துடன் திருப்பப்பட்ட விபரத்தினை தெரிவித்து, கடந்த 05.08.2025

ம் தேதியிட்டு எனது வழக்கறிஞர் மூலம் எதிரியின் முகவரிக்கு முறைப்படி வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்துள்ளேன். மேற்கண்ட அறிவிப்பில் காசோலை தொகை ரூ.5,00,000/– ஐ அறிவிப்பு கிடைத்த 15 தினங்களுக்குள் எனக்கு, எதிரி செலுத்தி வைக்க கேட்டுள்ளேன். மேற்படி அறிவிப்பினை எதிரி கடந்த 11.08.2025 ம் தேதி பெற்றுக் கொண்டு, இதுவரை எவ்வித பதிலறிவிப்பும் கொடுக்கவில்லை.

இவ்வாறாக எதிரி எனக்கு கொடுக்க வேண்டிய காசோலை தொகையாக ரூ.5,00,000/– கொடுக்காமல் ஏமாற்றும் கெட்ட எண்ணத்துடன் காசோலையை கொடுத்து அது எதிரியின் வங்கி கணக்கில் "Funds Insufficient" என்ற காரணத்துடன் பணம் கொடுக்கப்படாமல் திருப்பப்பட்டுள்ளது. எனவே, எதிரியிடமிருந்து கிடைகக வேண்டிய ரூ.5,00,000/– காசோலைத் தொகையினை இரண்டு மடங்காக எனக்கு செலுத்தி வைக்க வேண்டியும், எதிரி மீது செய்கை மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138 ன் கீழ் தண்டணை வழங்கிட வேண்டுமெண சத்தியபிரமாணமாய் சொல்கிறேன்.